தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 29-4-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 38வது வருடாந்திரப் பட்டமளிப்பு விழா வருகின்ற ஜுலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தால் 31-3-2017 அன்று வரையிலான தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட மாணவ மாணவியர்களிடமிருந்து பட்டங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் இதர விவரங்களைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளமான www.tnau.ac.in மூலம் 8-5-2017 முதல் விண்ணப்பம் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப கட்டணத்தை பல்கலைக்கழக இணைய தளத்தின் (The Comptroller, TNAU, Coimbatore) மூலம் செலுத்த வேண்டும்.

இப்பட்டமளிப்பு விழாவிற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் [அதாவது தற்காலிக பட்டப்படிப்பு சான்றிதழின் (PC) நகல், இறுதி பருவ மதிப்பெண் சான்றிதழின் நகல், இணையதளம் மூலமாக வங்கியில் செலுத்தப்பட்ட கட்டணத்திற்கான இரசீது மற்றும் சமீபத்தில் எடுத்த புகைப்படம் (2nos.)] இப்பல்கலைக்கழகத்திற்கு 16-6-2017-ம் தேதி மாலை 5 மணிக்குள் வந்து சேர வேண்டும். மேலும் இது சம்பந்தமான விவரங்கள் அறிய விரும்புவோர் 0422-6611506 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

மக்கள் தொடர்பு அலுவலர்